# பெப்ரவரி- 23 - வியாழன்

புனித பொலிக்கார்ப்பு

**யோவான் தண்ணீரால் திருமுழுக்குக் கொடுத்தார். நீங்களோ இன்னும் சில நாட்களில் தூய ஆவியால் திருமுழுக்கு பெறுவீர்கள் திப..1:5**

-----------------------------------------------------------------

## முதல் வாசகம்: சீராக்கின் ஞானம் 5: 1 – 4

அநீதப் பொருட்கள் மீது உன் நம்பிக்கையை வைக்காதே. வாழ்க்கைக்குப் போதுமானது எனக்கு உண்டு என்று சொல்லாதே் ஏனென்றால், பழிவாங்கும் காலத்திலும் மரண நேரத்திலும் அவை உனக்கு உதவப் போவதில்லை. உன் வலிமையை நம்பி உன் இதயத்தின் தீய நாட்டங்களைப் பின்செல்லாதே. நான் எவ்வளவோ வலிமை உள்ளவன் என் செயல்களைப் பற்றி என்னைக் கணக்குக் கேட்பவன் யார் என்று சொல்லாதே. ஏனென்றால், பழி வாங்கும் கடவுள் பழிவாங்குவார். பாவம் செய்தேன் அதனால் எனக்கு வந்த தீங்கு என்ன என்று சொல்லாதே. ஏனென்றால் உன்னத கடவுள் பொறுத்திருந்து தண்டிப்பார்.

**பதில்பாடல்:** ஆண்டவர் மீது நம்பிக்கை கொண்டோர் பேறுபெற்றோர்.

## நற்செய்தி: மாற்கு 9: 41 – 50

அக்காலத்தில் ஆண்டவர் இயேசு கூறியதாவது: நீங்கள் கிறிஸ்துவைச் சார்ந்தவர்கள் என்பதற்காக உங்களுக்கு ஒரு கிண்ணம் தண்ணீர் குடிக்கக் கொடுக்கிறவன், கைம்மாறு பெறாமல் போகான் என்று உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்.” ”என்னை விசுவசிக்கும் இச்சிறுவருள் ஒருவனுக்கு இடறலாய் இருப்பவன் எவனோ, அவனுடைய கழுத்தில் பெரிய எந்திரக்கல்லைக் கட்டிக் கடலில் தள்ளுவது அவனுக்கு நலம்.உன் கை உனக்கு இடறலாய் இருந்தால் அதை வெட்டிவிடு. இரண்டு கைகளோடு நரகத்திற்கு, அணையாத நெருப்பிற்குப் போவதைவிடக் கை ஊனாய் வாழ்வில் நுழைவது உனக்கு நலம்.உன் கால் உனக்கு இடறலாயிருந்தால் அதை வெட்டிவிடு. இரண்டு கால்களோடு நரகத்தில் தள்ளப்படுவதைவிட முடவனாய் முடிவில்லா வாழ்வில் நுழைவது உனக்கு நலம்.உன் கண் உனக்கு இடறலாயிருந்தால் அதை எறிந்துவிடு. இரண்டு கண்களோடு நரகத்தில் தள்ளப்படுவதைவிட ஒற்றைக் கண்ணனாய்க் கடவுளின் அரசிற்குள் நுழைவது உனக்கு நலம். அந்நரகத்திலோ அவர்களை அரிக்கும் புழு இறவாது நெருப்பும் அணையாது. ஏனெனில், ஒவ்வொருவனும் நெருப்பினால் உப்பிடப்படுவான். ”உப்பு நல்லதுதான். ஆனால் உப்பு உவர்ப்பு அற்றுப்போனால் எதைக்கொண்டு அதற்குச் சாரம் ஏற்றுவீர்கள்? உங்களுக்குள் உப்பு இருக்கட்டும். ஒருவர் ஒருவரோடு சமாதானமாயிருங்கள்.” என்றார்.

**தியானம்:** இன்றைய திருவாசகங்கள் இரண்டும் பாவ வாழ்வைக் கழைந்து, தூய்மையான புண்ணிய வாழ்வை வாழ எம் ஒவ்வொருவருக்கும் அழைப்பு விடுகின்றது. ஞானஸ்நானத்தின் மூலம் கிறிஸ்தவர்களாக அழைக்கப்பட்ட எமது வாழ்வு இரு கோணங்களாக இன்று வாழப்படுகின்றது. ஒன்று கிறிஸ்துவுக்குரிய ஆவிக்குரிய வாழ்வு, இரண்டாவது பாவவாழ்வு, சாத்தானுக்குரிய வாழ்வு. இவ்விடத்தில் நாம் எமது தனிப்பட்ட வாழ்வைப்பற்றி சற்று சிந்திக்க அழைக்கப்படுகின்றோம் . எமது வாழ்வு எதற்குள் அடங்குகின்றது? நாளாந்த வாழ்வில் முதலில் இறைவனுக்கு முதலிடம் கொடுத்து இறை அரசின் பண்புகளான அன்பு, இரக்கம், மன்னிப்பு, ஒற்றுமை, பகிர்வுடன் வாழ்கின்றோமா? அல்லது பாவவாழ்வை அதாவது போட்டி, பொறாமை, பழிக்குப்பழி, போதைவஸ்து, பாலியல், கொலை, கொள்ளை, பதவிமோகம் இவற்றுக்குள் அமிழ்ந்தி விடுகின்றோமா? அனைவரையும் மன்னிக்கும் இறைவன் நாளாந்தம் தமது வார்த்தை, தமது இரத்தம், உடல் மூலம் வருகின்றார். இறைவனது இந்தமாபெரும் அன்புக்கு எமது பிரதி அன்பு எதுவாக இருக்கின்றது. மாறிவரும் இவ்வுலகில் கிறிஸ்து அவன், கிறிஸ்து அவள் என்று வாழும் வாழ்வாக எமது வாழ்வை மாற்றுவோம், மாறுவோம் செயல்படுவோம்.